PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# அகநானூற்று குறிஞ்சித்திணை பாடல்களில் தலைவனின் ரஸங்கள்

**திருமதிபால்.சி.ரெனி.[1] & முனைவர் திருமதி லட்சுமி ராமசாமி [2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2]ஆய்வு நெறியாளர்**

**இசை மற்றும் நுண்கலைத் துறை**

**வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி (VISTAS)**
**சென்னை.**

**ஆய்வுநோக்கம்**

சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானூற்று குறிஞ்சித் திணை பாடல்களில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரமான தலைவனின் உணர்வுகளை பரதநாட்டிய ரஸங்களுடன் ஒப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாறு ஒப்பிடும் போது அகநானூற்றில் காணப்படும் பாடல்கள் அனைத்திற்கும் சிறப்பான முறையில் நாட்டிய வடிவமைப்பை அளிக்க முடியும் என்பதை அறிய முற்படுகிறது இக்கட்டுரை.

**ஆய்வு சுருக்கம்**

அகநானூற்று குறிஞ்சித்திணையில் அமைந்துள்ள தலைவன் கூற்று பாடல்களில் வெளிப்படும் உணர்வானது, பரதநாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரஸாக்கோட்பாட்டில் எவ்வாறு உணரப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு அறிமுகம்**

மலையும் மலை சார்ந்த இடமும் அமைந்துள்ள குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள அகநானூற்று பாடல்களில் இடம்பெறும் கதாப்பத்திரங்களுள் ஒன்றான தலைவனின் உணர்வுகளைக் கொண்டு வெளிப்படும் ரஸங்களை குறிப்பிடும் வகையில் "அகநானூற்று குறிஞ்சித்திணை பாடல்களில் தலைவனின் ரஸங்கள்" என்னும் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**முன்னுரை**

ஒரு மனிதனின் அகவுணர்வை வெளிப்படுத்த பாவம் என்னும் யுக்தியானது கையாளப்படுகிறது. 'பாவம்' என்பது உணர்ச்சி. இவ்வுணர்ச்சியை வெளிப்படுத்தும் கலையாக அபிநயம் விளங்குகின்றது. இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் மனிதனின் உணர்வாக எழும்போது உண்டாகும் சுவையாக ரஸம் விளங்குகிறது. அகநானூற்றில் தலைவன் கூற்று பாடல்கள் ஐவகை நிலங்களிளும் இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் சங்க இலக்கியத்தில் ஒன்றான அகநானூற்றின் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள தலைவன் கூற்றுப் பாடலை கொண்டு ஆய்வானது ஆராயப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையில் மொத்தம் பதிமூன்று பாடல்கள் தலைவன் கூற்றாக அமையப் பெற்றுள்ளது. இதில் இரண்டு பாடல்கள் மட்டும் இவ்வாய்வின் கட்டுரைக்காக எடுத்துக்

கொள்ளப்பட்டுள்ளது. அகநானூற்று குறுஞ்சித் திணையில், தலைவன் கூற்றுப் பாடல்களிலிருந்து வெளிப்படும் தலைவனின் உணர்வுகளை பரத நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ரஸா கோட்பாட்டோடு ஒப்பிட்டு இக்கட்டுரையானது விளக்கப்பட்டுள்ளது.

**"நெஞ்சு நடுங்கு அரும்படர் திர வந்து,**

**..........................................நடுங்குதுயர்தருமே" அகம்-152**

தலைவியைக் காண இரவுக் குறிவந்து நீங்கும் தலைமகன் தன் மனதிற்கு கூறுதல்.

**பொருள்**

களவு ஒழுக்கத்தில் தோழியின் உதவியுடன் இரவுப்பொழுதில் தலைவி, தலைவனை சந்தித்து கூடி இன்புற்று பின் வீடு திரும்பினாள். இந்நிகழ்வை எண்ணிய தலைவன் தன் மனதிற்குக் கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

**தலைவனின் வர்ணனை**

யாழின் நரம்பினை நுட்பமாக மீட்டி பாடக்கூடிய அகவுநர் என்னும் பாணர்களை பேணிக்காக்கும் தித்தன் என்னும் மன்னன் மிகுந்த சினம் கொண்ட படையை உடையவன். இவனுடைய கானலம் என்னும் பெருந்துறைப் பட்டினத்தில் பொன்னைக் கொண்டுவரும் மரக்கலத்தை தாக்கும் இறால்மீன் கூட்டம் போன்ற படைவீரர்களைக் கொண்டவன் பிண்டன் என்னும் மன்னன் ஆவான். இவனின் போர் செய்யும் சூழ்ச்சியை தகர்த்து, நன்னன் என்னும் மன்னன் தன் வேலால் பிண்டனைக் கொன்றான். நன்னன் கலைவாணர்களுக்கு ஆண்யானையைக் கொடையாக அளிக்கக் கூடிய பெரும் புகழ்கொண்டவன். இவன் பாரம் என்னும் ஊரின் தலைவன் ஆவான். இவனது ஏழில் என்னும் மலையின் பக்க மலையான பாழி என்னும் மலையில் வாழும் மயில்களின் தோகையைப் போன்ற அழகிய வளைந்த சுருண்ட கூந்தலினைக் கொண்டவள் என் தலைவி என்று தன் மனதிற்கு கூறுகிறான் தலைவன்.

**தலைவனின் புகழ்ச்சி**

வலிமையான வில்லை உடைய வீரர்களுக்குத் தலைவனான நள்ளி, கடையெழு வள்ளர்களில் ஒருவன் ஆவான். அவனுடைய சோலையில் மிகுந்த பக்க மலையில் கடவுளுக்கு சூடக்கூடிய காந்தள் மலர் பூத்திருக்கும். அதன் மணமானது, அழகிய பல மலர்கள் ஒன்றாக மணப்பது போல நறுமணத்தை அளித்திடும். இந்நறுமணம் போன்றே என் தலைவியின் தோளும் இனிய மணம் கொண்டது. அவளின் தோளின் நறுமணமானது எனது மிகுந்த துன்பத்தையும் நீக்கும். இத்தகைய பெருமை வாய்ந்த அவளின் தோள்கள், தன்னை நாடி பரிசல் பெற வந்தவர்கள் கல்வியில் சிறந்த வல்லவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்களுடைய பிச்சைப்பாத்திரம் நிறையும்படியாக மிடாசோற்றால் அவர்களுடைய கொடைகளை அளிக்கக்கூடிய பெரிய யானைகளை உடைய கடையேழு வள்ளல்களில் ஒருவராம் ஆஅய் என்னும் மன்னன். அம்மன்னனின் தலையாறு என்னுமிடத்தில் உயர்ந்த மலையில் வளர்ந்திருக்கும் மூங்கில் கணுக்களின் நடுப்பகுதி

ISSN: 2582-9513

போல என்னை விட்டு தூரமாக சென்றாள். இப்பிரிவால் நடுங்கத்தக்க துன்பத்தை அடைக்கிறேன் என்று தன் மனதிற்கு தலைவன் கூறுகிறான்.

**ரஸா அனுபவங்கள்**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரங்கள் தலைவன், தலைவி ஆகியோர் ஆவர். இதுவே **ஆலம்பன** விபாவமாகும். பாவங்கள் தோன்ற காரணமாய் அமைந்துள்ள மலைப்பகுதி(குன்று), சீறூர், மயில் தோகை, தலைவியின் கூந்தல், தலைவியின் தோள்கள், சோலை, மரக்கலம், இறால் மீன், யாழ் ஆகியன **உத்தீபன விபாவமாகும்.** தலைவன் தலைவி இருவரின் காதல் உணர்வானது வெளிப்படுவதால் இப்பாடலானது **சிருங்கார ரஸத்தில்** அமைந்துள்ளது. மேலும் இப்பாடலில் சிருங்காரத்தை அடிப்படையாகக் கொண்ட **வீர ரஸமும்**, **கருணை ரஸமும்** வெளிப்படுகின்றது. பிண்டன், நன்னன், நள்ளி மற்றும் ஆஅய் என்னும் மன்னர்களை பற்றிக் கூறுகையில் **வீர ரஸமும்** தலைவியைப் பிரிந்த தலைவனின் துன்பநிலையை கூறும் போது **கருணை ரஸம்** வெளிப்படுகின்றது. ரஸங்களின் விளைவாய் வரும் உத்ஸாஹம், ஆசை, சிந்தை ஆகியன **சிருங்கார ரஸத்தின் அனுபாவமாகும்.** முகம் மலர்தல், உத்ஸாஹம், சிந்தை, கர்வம், தைர்யம் ஆகியவை **வீர ரஸத்தின் அனுபாவமாகும்.** பெருமூச்சு விடுதல், சிரமம், சிந்தை ஆகியவை **கருணை ரஸத்தின் அனுபாவமாகும்.** நிர்வேதம், சிரமம், சிந்தை, மோகம், ஸம்ருதி, சபலதம், அவேகம், விஷாதம், ஔத்சுக்யம் போன்ற **வியபிசாரி பாவங்கள்** இப்பாடலில் தோன்றுகின்றது. ஸ்வேதம், ஸ்தம்பம் ஆகிய **சாத்விக பாவங்கள்** வெளிப்படுகின்றது. இப்பாடலில் வெளிப்படும் ரஸங்கள் ஒவ்வொன்றிற்கும் **ரதி** ஸ்தாயி பாவமாக அமைந்துள்ளது.

**"கூறுவம் கொல்லோ? கூரலம் கொல்? எனக்**

**.........................................................................**

**சூர்மகள் மாதோ - என் நெஞ்சே!** (அகம்-198) புலவர்- பரணர்

**பொருள்**

முன்பு களவு காலத்தின் பொழுது தலைவன் தன்னிடம் இருக்கும் உணர்வினை பல இனிய சொற்களால் ஆசையோடு தலைவியிடம் வெளிப்படுத்தி இருந்தான். அதன் விளைவாக தலைவி தலைவனை மீண்டும் காண வருகிறாள். தலைவனை காண வந்த தலைவி, தலைவனை கண்டவுடன் அணைத்துக் கொண்டாள். தலைவனும் தலைவியும் சேர்ந்து இன்புற்று புணர்ந்து மகிழ்ந்த பின்பு தலைவனை விட்டு விலகிச் சென்றபின் தலைவன், தலைவி தன்னை காண வந்த நிகழ்வினை பின்வருமாறு தன்னுள் எண்ணி மகிழ்கிறான்.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

**தலைவனின் வர்ணனை**

மழையை மறைத்து இருக்கும் கார் மேகம் போல காந்தள் பூவின் மணம் உடைய தன் நீண்ட கூந்தலில் தன்னை மறைத்துக்கொண்டும், தூய வேலைப்பாடுடன் கூடிய நூலாடையை நெஞ்சோடு போர்த்திக்கொண்டும், மழைதூரல் விழும் போது அசையும் மயில் போன்றும், வண்டு மொய்க்கும் புத்தம்புது மலர்களைச் சூடிக்கொண்டும், வில்லைப் போல் வளைந்து உருண்ட குடைப் போல் புடைத்து இருக்கும் தன் சிலம்பின் ஒலியை ஒடுக்கிக் கொண்டும் தலைவி மெல்ல ஊரே உறங்கும் நள்ளிரவு நேரத்தில் தன்னை காண வந்தாள்.

**தலைவனின் புகழ்ச்சி**

தலைவன் தன் தலைவியை, கற்பின் அடக்கம் என்றும் பெருமையின் பெருக்கம் நிறைந்தவள் என்றும் மாமை நிறம் கொண்ட நிலவுலக பெண் அழகி மட்டும் அல்ல,தென்திசையில் ஆளும் அரசனான 'ஆய்' என்னும் அரசனின் நாட்டில் உள்ள, அணங்கு வாழும் காட்டினுள் 'கவிரம்' என்னும் பெயர் கொண்ட மலைப்பிளவில், மலர்கள் பூத்துக் குலுங்கும் சுனையில் வாழும் சூர்மகளோ! என்று எண்ணி மகிழ்ந்து தன் நெஞ்சிற்கு கூறினான் தலைவன்.

**ரஸா அனுபவங்கள்**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரங்கள் தலைவன், தலைவி ஆகியோர் ஆவர். இதுவே **ஆலம்பன** விபாவமாகும். இப்பாவங்கள் தோன்றுவதற்கு காரணமாய் அமைந்துள்ள மலைபகுதி, மலர்கள், சுனை, கார்மேகம், மதுரமான வார்த்தைகள், மழை, மயில், வண்டு, வில், கவிரம்(மலைப்பகுதி), சிலம்பு ஆகியவை **உத்தீபன விபாவம்** ஆகும். தலைவன் தலைவி ஆகிய இருவரின் காதல் உணர்வானது வெளிப்படுவதால் இப்பாடலானது **சிருங்கார ரஸத்தில்** அமைந்துள்ளது. இப்பாடலில் சிருங்கார ரஸத்தை அடிப்படையாகக் கொண்டு தலைவியை புகழ்ந்து தலைவன் வியக்குமிடத்தில் **அற்புதம்** என்னும் ரஸமானது உணரப்படுகின்றது. உத்ஸாஹம், ஆசை, சிந்தை ஆகியவை **சிருங்கார ரஸத்தின் அனுபாவமாகும்.** முகம் மலர்தல், கண் மடல் விரிதல், ஆச்சர்யம், பிரமை ஆகியவை **அற்புத ரஸத்தின் அனுபாவம் ஆகும்.** இப்பாடலில் மோகம், ஹர்ஷம், ஆவேகம், சிந்தை, அவஹித்தம், ஸ்மிருதி, ஜடதை என்னும் **வியபிச்சாரி பாவங்கள்** தோன்றுகின்றது. இப்பாடலில் வெளிப்படும் ரஸங்கள் ஒவ்வொன்றிக்கும் **ரதி** ஸ்தாயி பாவமாக அமைந்துள்ளது.

**சிறப்புகள்**

தலைவன் கூற்றில் அமையப் பெற்ற இப்பாடல்களில் மன்னர்களான நன்னன், அதிகன், சேர மன்னன், பொறையன் கடுங்கோ, படைவீரன் மிஞிலி, பிண்டன், நள்ளி மற்றும் ஆஅய் ஆகியோர்களின் போர், வீரம், கொடை ஆகிய புறப்பொருள் செய்திகள் இடம்பெற்றுள்ளது.

ISSN: 2582-9513

மேலும் பெண்கள் அணியும் அணிகலன்களில் ஒன்றான சிலம்பின் வடிவத்தைப் பற்றிய செய்திகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறையினை எடுத்துக்காட்டும் வரலாற்று சான்றுகள் ஆகும். இச்சான்றுகளில் குறிப்பிட்டுள்ள மனிதன் வெளிப்படுத்தும் உணர்வுகளை பரதநாட்டிய ரஸங்களோடு ஒப்பிட்டு அறிய முடியும் என்பதை இக்கட்டுரை உணர்த்துகின்றது.

**துணை நூல்பட்டியல்**


- நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கரந்தைக் கவியரசு ரா.வேங்கடாசலம் பிள்ளை, அகநானூறு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை. ப 76,181.
- முனைவர் லட்சுமிராமசுவாமி,இந்திய பாரம்பரியத்தில் சுவை,ஸ்ரீமுத்ராலயா பதிப்பகம், சென்னை. ப 102,103.
- பத்மாசுப்பிரமணியம்,பரதக்கலைகோட்பாடு,வானதி பதிப்பகம்,சென்னை. ப 143,144.
- அ.மாணிக்கனார்,அகநானூறு மூலமும் உரையும்,வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை. ப 132, 302.